# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 68/2017

| | |
|---|---|
| | Prosecution PW 7 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | முத்துக்குமார் |
| Father's Name | : | நாகசுந்தரம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 09.06.2025

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் பசுபதிபாளையம் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு வெங்கமேடு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது, 02.04.2015 ம் தேதி உதவி ஆய்வாளர் திரு.லட்சுமிபதிராஜ் நிலைய பொறுப்பில் இருந்தபோது, மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளை

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

CRL.OP.(MD)NO.202305/2014, DATED.11.12.2014 உத்தரவுபடி சந்திரசேகர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய கு.எண்.82/2015, ச.பி.420 இதசவின்படி வழக்கு பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்திருந்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று காலை சுமார் 11.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாகராஜன், சாமியப்பன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு சாட்சிகள் சந்திரசேகர், யாழினி, பவித்ரா, விமலா, முகமது சித்திக், சங்கர்பிள்ளை ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணையில் எதிரி பாண்டியன் என்பவர் வாதி இல்லாத சமயத்தில் வாதியின் வீட்டிற்கு சென்று வாதியினுடைய மகள்கள் பவித்ரா, யாழினி ஆகியோர்களிடம் நயவஞ்சகமாக பேசி வாதி சேமித்து வைத்திருந்த பழங்கால நாணயங்கள் ரூபாய் நோட்டுக்கள் ( பணத்தாள்கள் ), பிரிட்டிஷ் காலத்து செம்பு, வெள்ளி, பித்தளை, தங்க நாணயங்கள் உங்களுடைய அப்பா என்னை வாங்கிவரச் சொன்னார் என்று பேசி மேற்படி சுமார் மூன்று லட்சம் பழங்காலத்து நாணயங்களை ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்து போலியான முகவரியை கொடுத்து ஏமாற்றி சென்று விட்டார் என்று எனது விசாரணையில் தெரிய வந்தது. நான் பணி மாற்றத்தில் சென்றுவிட்டதால் எனக்கு பின்பு வந்த ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**